கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,

**முன்னிலை : செல்வி.பவித்ரா. G, எல்.எல்.எம்.,**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் நாள் புதன்கிழமை

**I.A.No.36/2026 in OS 316/2011**

செல்லபாஸ்கர் ... மனுதாரர்/ வாதி

/எதிர்/

1. லில்லி ஜாய்ஸ்
2. ஜோசப் சாம்ராஜ்
3. கந்தலீலா
4. சரஸ்வதி
5. கணேசமுருகன்
6. V.L.V.S.கனகராஜ்
7. சீனிவாசகம் (இறந்துவிட்டார்)
8. ஞானமுத்து (இறந்துவிட்டார்)
9. ஜெயசீலன்
10. வசந்தி
11. சந்திரா (இறந்துவிட்டார்)
12. செல்லையா

13.செல்வின்

14.கமலவேணி

15.ரஞ்சிதம்

16.பியூலா ஹெலன்

17.பிரேம்சாந்த்

18.ஜெபஸ்டியான்

19.ரெஜினா

20.அற்புதராஜ்

21.நவமணி

22.சிம்சோன்

23.காலின்ஸ்

24.குணசேகரன் ... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனு இறுதி விசாரணைக்காக 15.04.2026 அன்று வந்தபோது, மனுதாரர் தரப்பில் மனுதாரரே நேரடியாக முன்னிலையாகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.F.X.யூஜின் அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ராகுல் அவர்கள் ஆஜராகியும், 7, 8 எதிர்மனுதாரர்கள் இறந்துவிட்ட நிலையிலும், 11ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டும், 9, 10, 12 முதல் 24 எதிர்மனுதாரர்களைப் பொறுத்து தோன்றாத்தரப்பினர்களாகத் தீர்மானிக்கப்பட்டும், தரப்பினர்களின் வாதங்களைக் கேட்டறிந்தும், மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களைப்

பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>உத்தரவு</u>

மனுதாரர்/வாதி தரப்பில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 18, விதி 17 மற்றும் பிரிவு 151 கீழ், அசல் வழக்கில் வா.சா.1 ஆன தன்னை மீண்டும் சாட்சியமளிக்க (Re – call) மீள் அழைப்பு செய்து உத்தரவிடக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரர் / வாதி தரப்பு மனுவின் சுருக்கம்</u> :–

அசல் வழக்கில், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது, பிராது தபசில் சொத்துக்கள் தனக்கு மட்டும் தனித்துப் பாத்தியப்பட்டவை என விளம்புகைப் பரிகாரம் கோரியும், இந்நீதிமன்றம் குறிப்பிடும் காலத்திற்குள் பிராது தபசில் சொத்துக்களைத் தன்னிடம் சுவாதீனம் ஒப்படைக்கக் கோரியும், பிராது 2வது அயிட்டச் சொத்தில் 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ள கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தி தன்னிடம் சுவாதீனம் ஒப்படைக்கக்கோரி செயலுறுத்துக்கட்டளைப் பரிகாரம் மற்றும் நிரந்தர நிலையுறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து, தனது தரப்பு சாட்சி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, தனது தரப்பில் 1, 3 மற்றும் 4 பிரதிவாதிகளை தவிர மற்ற பிரதிவாதிகள் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள் என்றும், தனது தரப்பில் கூடுதல் சான்றாவணங்கள் தாக்கல் செய்து, அவைகளை ஏற்றுக் கொள்ளும் வகைக்கு தாவா வழக்கில் தான் மறுபடியும் சாட்சியமளிக்க

வேண்டியுள்ளதால் இந்நீதிமன்றத்திற்கு தன்னை (Re call) மீள் அழைப்பு செய்து உத்தரவிட வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் இருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. <u>6 ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்து, 1, 2 மற்றும் 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>.

இவ்வழக்கானது கடந்த 04.12.2023 அன்று மனுதாரர் தரப்பு வாதுரைக்காக ஒத்திவைக்கப்பட்ட நிலையில் மனுதாரர் வ.வி.எண்.22/2023 மனுவினைத் தாக்கல் செய்திருந்தார் என்றும், அம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட்ட பின்னர், மனுதாரர் மீண்டும் வ.வி.எண்.23/23, 24/2023 மற்றும் 25/2023 ஆகிய மனுக்களைத் தாக்கல் செய்திருந்தார் என்றும், மேற்கண்ட மனுக்கள் அனுமதிக்கப்பட்டதின் அடிப்படையில் திருவேங்கடம் வட்டாட்சியர் அவர்களும், கரிவலம்வந்தநல்லூர் சார்பதிவாளர் அவர்களும் மனுதாரர் தரப்பு சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்டனர் என்றும், அதன் பின்னர் பிரதான வழக்கானது மீண்டும் 05.06.2024 அன்று வாதுரைக்காக ஒத்தி வைக்கப்பட்டது என்றும், ஆனால் மனுதாரர் தரப்பில் பிரதான வழக்கில் வாதுரை செய்யப்படாமல் மீண்டும் 27/2024 முதல் 29/2024 வரையிலான மனுக்களை மனுதாரர் தாக்கல் செய்திருந்தார் என்றும், அம்மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்ட பின் மனுதாரர் மீண்டும் 10.06.2024 ல் வ.வி.எண்.30/2024, 31/2024 ஐத் தாக்கல் செய்தார் என்றும், அம்மனுக்கள் முழுமையான விசாரணைக்குப் பிறகு 10.09.2024 ல்

அம்மனுக்களானது தள்ளுபடி செய்யப்பட்டு, வாதுரைக்காக மீண்டும் 12.09.2024 ல் வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது என்றும், அதன் பின்னரும் மனுதாரர் தன் தரப்பு வாதுரையை எடுத்துரைக்க முன் வராமல் மீண்டும் 23.09.2024 ல் வ.வி.எண்.32/2024 என்ற மனுவினைத் தாக்கல் செய்தார் என்றும், அம்மனுவும் முழுமையான விசாரணைக்குப் பின்னர் கடந்த 28.10.2024 ல் தள்ளுபடி செய்யப்பட்டு மீண்டும் வாதுரைக்காக வழக்கானது 04.12.2024 ல் ஒத்தி வைக்கப்பட்டது என்றும், அதன் பின்னரும் வாதுரையை எடுத்துரைக்க முன்வராத மனுதாரர், வாதுரைக்காக சில வாய்தாக்களை பெற்றுக்கொண்ட பின்னர் கடந்த 16.11.2024 ல் வ.வி.எண்.33/2024 மனுவினைத் தாக்கல் செய்தார் என்றும், அம்மனுவும் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில் 23.04.2025 தேதிவரை வாதுரைக்காக பல வாய்தாக்களைப் பெற்றுவந்த மனுதாரர் மீண்டும் 30.04.2025 ல் வ.வி.எண்.34/2025 ஐத் தாக்கல் செய்தார் என்றும், அம்மனுவும் கடந்த 08.09.2025 ல் முழுமையான விசாரணைக்கு பின் தள்ளுபடி செய்யப்பட்டு, மீண்டும் பிரதான வழக்கானது வாதுரைக்காக 12.09.2025 அன்று ஒத்தி வைக்கப்பட்ட நிலையில், மீண்டும் பல வாய்தாக்களை பெற்றுக்கொண்ட மனுதாரர் மீண்டுமாக 26.11.2025 ல் வ.வி.எண்.35/2025 ஐ தாக்கல் செய்திருந்தார் என்றும், அம்மனுவும் முழுமையான விசாரணைக்குப் பின் 16.02.2026 அன்று தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், அதன் பின்னரும் வாதுரைக்காக பல வாய்தாக்களை பெற்றுக்கொண்ட மனுதாரர் தற்போது இம்மனுவினையும், அத்துடன் வ.வி.எண்.37/2026 மற்றும் 38/2026 மனுக்களையும் தாக்கல் செய்துள்ளார் என்றும், ஆக 02.12.2023 ல் வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டிருந்த வழக்கை பல இடைநிலை மனுக்களைத் தாக்கல் செய்து, சுமார் 2 ஆண்டுகள் கடந்தும் மனுதாரர்

வெற்றிகரமாக வழக்கினை வாதுரை செய்யாமல் காலங்கடத்தி வருகிறார் என்றும், கடந்த 2 ½ ஆண்டுகளுக்கும் மேலாக வழக்கில் தனது வாதுரையை எடுத்துரைக்க முன் வராமல் Successful ஆக வழக்கை மனுதாரர் நிகழ்நிலையில் வைத்துள்ளார் என்றும், மேலும் மனுதாரர் இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்ட இடைநிலை மனுக்களின் மீது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் CRP No.1475/2024, 1476/2024, 725/2025, 3096/2025 and 593/2025 ஆகிய சீராய்வு மனுக்களை தாக்கல் செய்திருந்தார் என்றும், மேற்கண்ட சீராய்வு மனுக்களானது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தள்ளுபடி செய்யப்பட்டும், இவ்வழக்கின் விசாரணையை விரைந்து முடிக்க வேண்டுமெனக் குறிப்பிட்டு (Specific) உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், ஆனால் இந்த மனுதாரர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவினை மதிக்காமல், தற்போது வரை அவமரியாதை செய்யும் நோக்கோடும் செயல்பட்டு தற்போது வரை இம்மனுக்களையும் தாக்கல் செய்துள்ளார் என்றும், மேலும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை CRP. No.3096/2025 and 593/2025 மனுக்களில் "Furthermore, the suit has been made time, bound purs want to the specific directions of this hon'ble court to complete the Proceeding and pass tinal orders within stipulate time frame – entertaining applications of this nature at the fag and of the trial would directly defeat the expeditious disposal. Without sufficient supporting material and with the aparant intent to delay the proceedings. என குறிப்பிட்டு தெரிவித்துள்ளது என்றும், அதன் பின்னரும் மனுதாரர் மேற்கண்ட உத்தரவுகளைப் பின்பற்றவோ, நடைமுறைப்படுத்தவோ மன்றத்திற்கு எவ்வித

ஒத்துழைப்பும் வழங்காமல் மீண்டுமாக இதுபோன்ற மனுக்களைத் தொடர்ச்சியாக தாக்கல் செய்து வருகிறார் என்றும், இந்த மனுதாரர் மனுவுடன் தாக்கல் செய்துள்ள 1 முதல் 7 ஆவணங்கள் ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள் என்றும், அவை திருவேங்கடம் வட்டாட்சியர் மூலமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மற்ற ஆவணங்கள் அனைத்தும் சாட்சிய அந்தஸ்து இல்லாத ஆவணங்கள் என்றும், மேலும் மேற்கண்ட ஆவணங்களில் குறிப்பிட்ட சில ஆவணங்கள் ஒளிநகல் ஆவணங்கள் ஆகும் என்றும், வேறு சில ஆவணங்கள் Competent authoriuty ஆல் வழங்கப்படாத ஆவணங்கள் ஆகும் என்றும், எனவே மனுதாரர் குறியீடு செய்யக்கோரும் ஆவணங்கள் அனைத்தும் சாட்சிய அந்தஸ்து பெறாத ஆவணங்கள் என்றும், மனுதாரர் இவ்வழக்கினை Reopen செய்ய வேண்டுமென இம்மனுக்களுடன் சேர்ந்து ஏழு வரையிலான மனுக்களைத் தாக்கல் செய்திருந்தார் என்றும், மேலும் ஆணையர் நியமனம் கோரி இரண்டு மனுக்கள் தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்கண்ட மனுக்கள் விசாரணையில் இந்த மனுதாரர் Intension ஆனது வழக்கினை இழுத்தடிப்பு செய்ய வேண்டுமென்றே ஒரே நோக்கம் கொண்டதென இந்நீதிமன்றம் அறிந்து கொள்ள இயலும் என்றும், மேலும் இவ்வழக்கை தன்னிச்சையாக நடத்தி வரும் மனுதாரர் பல்வேறு Hearing தேதியில் ஆஜராகாத நிலையிலும், இந்நீதிமன்றம் அவருக்கு நீதியின் நலன் கருதி பல்வேறு Opportunity ஐ வழங்கிய போதும் அவையனைத்தும் மனுதாரர் Misuse செய்து தொடர்ந்து இந்நீதிமன்ற உத்தரவையும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவையும் அவமரியாதை செய்து வருகிறார் என்றும், எனவே மனுதாரருக்கு இம்மனுக்களில் எவ்வித பரிகாரமும் கிடைக்கக்கூடியதல்ல என்றும்,

மனுதாரர் இதுபோன்று மனுக்களைத் தொடர்ந்து தாக்கல் செய்து எதிர்மனுதாரருக்கு இடைஞ்சலும், வீண் அலைக்கழிவும் உண்டு பண்ணும் நோக்கில் செயல்பட்டு வருவதால், மனுதாரின் மனுவினை எதிர்மனுதாரின் செலவுத்தொகை சகிதம் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டியதாய் இருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. 6ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1, 2 மற்றும் 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள், 6ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையை ஏற்றுக் கொள்வதாகக் கூறி குறிப்பாணை தாக்கல் செய்துள்ளனர். 9, 10, 12 முதல் 24 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப் போதிய கால அவகாசம் வழங்கியும், நீதிமன்றத்தில் எந்தவித எடுத்துரைப்பும் இல்லாததால் அவர்களைப் பொறுத்து 09.04.2026 அன்று தோன்றாத்தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

5. மனு, அபிடவிட் மற்றும் எதிருரைகள் பரிசீலிக்கப்பட்டன. உபயத் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டன.

6. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

7. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

8. **<u>தீர்வு</u>** :-

8.1. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில், அசல் வழக்கானது 765/1, 426B/2B2A, 426B/9 ஆகிய சர்வே எண்களில் உள்ள பிராது தபசில் சொத்துக்களைப் பொறுத்து விளம்புகை, சுவாதீனம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரங்கள் கோரி வாதி/மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதையும், அந்த அசல் வழக்கில் இரு தரப்பு சாட்சிய விசாரணைகள் முடிவுற்று, இரு தரப்பு வாதங்களைக் கேட்பதற்காக வாய்தா போடப்பட்ட நிலையில், வாதி தரப்பில் கூடுதல் சான்றாவணங்களை குறியீடு செய்யும் வகைக்கு அசல் வழக்கை மறுதிறவு செய்யக்கோரி வ.வி.எண்.38/2026 என்ற மனுவை தாக்கல் செய்துள்ளார் என்பதையும் அந்த ஆவணங்களை மனுதாரர் தரப்பு சான்றாவணங்களாகக் குறியீடு செய்துகொள்ளும் வகைக்கு வா.சா.1 ஐ மீண்டும் அழைக்க உத்தரவிடக்கோரி இம்மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அறிய முடிகிறது.

8.2. மனுதாரர் தரப்பில், அசல் வழக்கில், எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள் மீது, பிராது தபசில் சொத்துக்கள் தனக்கு மட்டும் தனித்துப் பாத்தியப்பட்டவை என விளம்புகைப் பரிகாரம் கோரியும், இந்நீதிமன்றம் குறிப்பிடும் காலத்திற்குள் பிராது தபசில் சொத்துக்களைத் தன்னிடம் சுவாதீனம் ஒப்படைக்கக் கோரியும், பிராது 2 வது அயிட்டச் சொத்தில் 3 ம் எதிர்மனுதாரர்/3 ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ள கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தி தன்னிடம் சுவாதீனம் ஒப்படைக்கக்கோரி

செயலுறுத்துக்கட்டளைப் பரிகாரம் மற்றும் நிரந்தர நிலையுறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து, தனது தரப்பு சாட்சி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, தனது தரப்பில் 1, 3 மற்றும் 4 பிரதிவாதிகளை தவிர மற்ற பிரதிவாதிகள் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள் என்றும், தனது தரப்பில் கூடுதல் சான்றாவணங்கள் தாக்கல் செய்து, அவைகளை ஏற்றுக் கொள்ளும் வகைக்கு தாவா வழக்கில் தான் மறுபடியும் சாட்சியமளிக்க வேண்டியுள்ளதால் இந்நீதிமன்றத்திற்கு தன்னை (Re call) மீள் அழைப்பு செய்து உத்தரவிட வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் இருக்கிறது என்று எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

8.3. 1, 2 மற்றும் 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில்,இவ்வழக்கானது கடந்த 04.12.2023 அன்று மனுதாரர் தரப்பு வாதுரைக்காக ஒத்திவைக்கப்பட்ட நிலையில் மனுதாரர் வ.வி.எண்.22/2023 மனுவினைத் தாக்கல் செய்திருந்தார் என்றும், அம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட்ட பின்னர், மனுதாரர் மீண்டும் வ.வி.எண்.23/23, 24/2023 மற்றும் 25/2023 ஆகிய மனுக்களைத் தாக்கல் செய்திருந்தார் என்றும், மேற்கண்ட மனுக்கள் அனுமதிக்கப்பட்டதின் அடிப்படையில் திருவேங்கடம் வட்டாட்சியர் அவர்களும், கரிவலம்வந்தநல்லூர் சார்பதிவாளர் அவர்களும் மனுதாரர் தரப்பு சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்டனர் என்றும், அதன் பின்னர் பிரதான வழக்கானது மீண்டும் 05.06.2024 அன்று வாதுரைக்காக ஒத்தி வைக்கப்பட்டது என்றும், ஆனால் மனுதாரர் தரப்பில் பிரதான வழக்கில் வாதுரை செய்யப்படாமல் மீண்டும் 27/2024 முதல் 29/2024 வரையிலான

மனுக்களை மனுதாரர் தாக்கல் செய்திருந்தார் என்றும், அம்மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்ட பின் மனுதாரர் மீண்டும் 10.06.2024 ல் வ.வி.எண்.30/2024, 31/2024 ஐத் தாக்கல் செய்தார் என்றும், அம்மனுக்கள் முழுமையான விசாரணைக்குப் பிறகு 10.09.2024 ல் அம்மனுக்களானது தள்ளுபடி செய்யப்பட்டு, வாதுரைக்காக மீண்டும் 12.09.2024 ல் வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது என்றும், அதன் பின்னரும் மனுதாரர் தன் தரப்பு வாதுரையை எடுத்துரைக்க முன் வராமல் மீண்டும் 23.09.2024 ல் வ.வி.எண்.32/2024 என்ற மனுவினைத் தாக்கல் செய்தார் என்றும், அம்மனுவும் முழுமையான விசாரணைக்குப் பின்னர் கடந்த 28.10.2024 ல் தள்ளுபடி செய்யப்பட்டு மீண்டும் வாதுரைக்காக வழக்கானது 04.12.2024 ல் ஒத்தி வைக்கப்பட்டது என்றும், அதன் பின்னரும் வாதுரையை எடுத்துரைக்க முன்வராத மனுதாரர், வாதுரைக்காக சில வாய்தாக்களை பெற்றுக்கொண்ட பின்னர் கடந்த 16.11.2024 ல் வ.வி.எண்.33/2024 மனுவினைத் தாக்கல் செய்தார் என்றும், அம்மனுவும் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில் 23.04.2025 தேதிவரை வாதுரைக்காக பல வாய்தாக்களைப் பெற்றுவந்த மனுதாரர் மீண்டும் 30.04.2025 ல் வ.வி.எண்.34/2025 ஐத் தாக்கல் செய்தார் என்றும், அம்மனுவும் கடந்த 08.09.2025 ல் முழுமையான விசாரணைக்கு பின் தள்ளுபடி செய்யப்பட்டு, மீண்டும் பிரதான வழக்கானது வாதுரைக்காக 12.09.2025 அன்று ஒத்தி வைக்கப்பட்ட நிலையில், மீண்டும் பல வாய்தாக்களை பெற்றுக்கொண்ட மனுதாரர் மீண்டுமாக 26.11.2025 ல் வ.வி.எண்.35/2025 ஐ தாக்கல் செய்திருந்தார் என்றும், அம்மனுவும் முழுமையான விசாரணைக்குப் பின் 16.02.2026 அன்று தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், அதன் பின்னரும் வாதுரைக்காக பல வாய்தாக்களை பெற்றுக்கொண்ட மனுதாரர் தற்போது

இம்மனுவினையும், அத்துடன் வ.வி.எண்.37/2026 மற்றும் 38/2026 மனுக்களையும் தாக்கல் செய்துள்ளார் என்றும், ஆக 02.12.2023 ல் வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டிருந்த வழக்கை பல இடைநிலை மனுக்களைத் தாக்கல் செய்து, சுமார் 2 ஆண்டுகள் கடந்தும் மனுதாரர் வெற்றிகரமாக வழக்கினை வாதுரை செய்யாமல் காலங்கடத்தி வருகிறார் என்றும், கடந்த 2 ½ ஆண்டுகளுக்கும் மேலாக வழக்கில் தனது வாதுரையை எடுத்துரைக்க முன் வராமல் Successful ஆக வழக்கை மனுதாரர் நிகழ்நிலையில் வைத்துள்ளார் என்றும், மேலும் மனுதாரர் இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்ட இடைநிலை மனுக்களின் மீது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் CRP No.1475/2024, 1476/2024, 725/2025, 3096/2025 and 593/2025 ஆகிய சீராய்வு மனுக்களை தாக்கல் செய்திருந்தார் என்றும், மேற்கண்ட சீராய்வு மனுக்களானது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தள்ளுபடி செய்யப்பட்டும், இவ்வழக்கின் விசாரணையை விரைந்து முடிக்க வேண்டுமெனக் குறிப்பிட்டு (Specific) உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், ஆனால் இந்த மனுதாரர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவினை மதிக்காமல், தற்போது வரை அவமரியாதை செய்யும் நோக்கோடும் செயல்பட்டு தற்போது வரை இம்மனுக்களையும் தாக்கல் செய்துள்ளார் என்றும், மேலும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை CRP. No.3096/2025 and 593/2025 மனுக்களில் "Furthermore, the suit has been made time, bound purs want to the specific directions of this hon'ble court to complete the Proceeding and pass tinal orders within stipulate time frame – entertaining applications of this nature at the fag and of the trial would directly

defeat the expeditious disposal. Without sufficient supporting material and with the aparant intent to delay the proceedings. என குறிப்பிட்டு தெரிவித்துள்ளது என்றும், அதன் பின்னரும் மனுதாரர் மேற்கண்ட உத்தரவுகளைப் பின்பற்றவோ, நடைமுறைப்படுத்தவோ மன்றத்திற்கு எவ்வித ஒத்துழைப்பும் வழங்காமல் மீண்டுமாக இதுபோன்ற மனுக்களைத் தொடர்ச்சியாக தாக்கல் செய்து வருகிறார் என்றும், இந்த மனுதாரர் மனுவுடன் தாக்கல் செய்துள்ள 1 முதல் 7 ஆவணங்கள் ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள் என்றும், அவை திருவேங்கடம் வட்டாட்சியர் மூலமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மற்ற ஆவணங்கள் அனைத்தும் சாட்சிய அந்தஸ்து இல்லாத ஆவணங்கள் என்றும், மேலும் மேற்கண்ட ஆவணங்களில் குறிப்பிட்ட சில ஆவணங்கள் ஒளிநகல் ஆவணங்கள் ஆகும் என்றும், வேறு சில ஆவணங்கள் Competent authoriuty ஆல் வழங்கப்படாத ஆவணங்கள் ஆகும் என்றும், எனவே மனுதாரர் குறியீடு செய்யக்கோரும் ஆவணங்கள் அனைத்தும் சாட்சிய அந்தஸ்து பெறாத ஆவணங்கள் என்றும், மனுதாரர் இவ்வழக்கினை Reopen செய்ய வேண்டுமென இம்மனுக்களுடன் சேர்ந்து ஏழு வரையிலான மனுக்களைத் தாக்கல் செய்திருந்தார் என்றும், மேலும் ஆணையர் நியமனம் கோரி இரண்டு மனுக்கள் தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்கண்ட மனுக்கள் விசாரணையில் இந்த மனுதாரர் Intension ஆனது வழக்கினை இழுத்தடிப்பு செய்ய வேண்டுமென்றே ஒரே நோக்கம் கொண்டதென இந்நீதிமன்றம் அறிந்து கொள்ள இயலும் என்றும், மேலும் இவ்வழக்கை தன்னிச்சையாக நடத்தி வரும் மனுதாரர் பல்வேறு Hearing தேதியில் ஆஜராகாத நிலையிலும், இந்நீதிமன்றம் அவருக்கு நீதியின் நலன் கருதி பல்வேறு Opportunity ஐ வழங்கிய போதும் அவையனைத்தும்

மனுதாரர் Misuse செய்து தொடர்ந்து இந்நீதிமன்ற உத்தரவையும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவையும் அவமரியாதை செய்து வருகிறார் என்றும், எனவே மனுதாரருக்கு இம்மனுக்களில் எவ்வித பரிகாரமும் கிடைக்கக்கூடியதல்ல என்றும், மனுதாரர் இதுபோன்று மனுக்களைத் தொடர்ந்து தாக்கல் செய்து எதிர்மனுதாரருக்கு இடைஞ்சலும், வீண் அலைக்கழிவும் உண்டு பண்ணும் நோக்கில் செயல்பட்டு வருவதால், மனுதாரின் மனுவினை எதிர்மனுதாரின் செலவுத்தொகை சகிதம் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டியதாய் இருக்கிறது என்று எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

8.4. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. மனு, எதிருரை மற்றும் வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் தரப்பில், வ.விஎண்.38/2026 மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் சான்றாவணங்களை மனுதாரர் தரப்பு சாட்சியமாக குறியீடு செய்யும் வகைக்கு வா.சா.1 ஆக அசல் வழக்கில் சாட்சியம் அளித்துள்ள தன்னை மீண்டும் அழைப்பது தனது தரப்பு கட்சியை நிரூபிப்பதற்கு அவசியம் என்றும், அவ்வாறு அனுமதிக்கப்படாவிடில் தனக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்படும் என்றும் எடுத்துரைக்கப்பட்டது. 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில், கடந்த 04.12.2023 அன்று அசல் வழக்கு மனுதாரர் தரப்பு வாதுரைக்காக ஒத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், மனுதாரர் வ.வி.எண்.22/2023 என்ற மனுவைத் தாக்கல் செய்திருந்தார் என்றும், அம்மனு தள்ளுபடி செய்யப்பட்ட பிறகு வ.வி.எண்.23/2023 முதல் 25/2023 வரையிலான மனுக்களை மனுதாரர் தாக்கல் செய்தார் என்றும், அம்மனுக்கள் அனுமதிக்கப்பட்டதன் பேரில் திருவேங்கடம் வட்டாட்சியர்,

கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கரிவலம்வந்தநல்லூர் சார்பதிவாளர் ஆகியோர்கள் வாதி தரப்பு சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்டனர் என்றும், அதன் பின்னர் அசல் வழக்கு மீண்டும் மனுதாரர் தரப்பு வாதுரைக்காக 05.06.2024 அன்று ஒத்தி வைக்கப்பட்டது என்றும், அன்றைய தினம் மனுதாரர் தனது தரப்பு வாதுரையை அளிக்காமல் அதற்கு பதிலாக வ.வி.எண்.27/2024 முதல் 29/2024 வரையிலான மனுக்களை தாக்கல் செய்தார் என்றும், அம்மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்ட பிறகு அதை தொடர்ந்து வ.வி.எண்.30/2024 முதல் 38/2024 வரையிலான மனுக்களை 10.06.2024 முதல் தற்போது வரை மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ளார் என்றும், அம்மனுக்கள் அனைத்தும் முழு விசாரணைக்கு பிறகு தள்ளுபடி செய்யப்பட்டன என்றும், அசல் வழக்கில் வாதம் செய்யாமல் சுமார் 2 ½ ஆண்டுகளாக மனுதாரர் காலம்கடத்தி வருகிறார் என்றும், தள்ளுபடி செய்யப்பட்ட மேற்படி மனுக்கள் மீது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் CRP.No.1475/2024, 1476/2024, 725/2025, 3096/2025 மற்றும் 593/2025 ஆகிய சீராய்வு மனுக்களை தாக்கல் செய்திருந்தார் என்றும், அம்மனுக்களை மாண்புமிகு உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்து அசல் வழக்கை விரைந்து முடிக்க வேண்டுமென உத்தரவு பிறப்பித்தது என்றும், அந்த உத்தரவை மனுதாரர் மதியாமல் அசல் வழக்கைக் காலம்கடத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு தொடர்ந்து மனுக்களைத் தாக்கல் செய்து வருகிறார் என்றும், வ.வி.எண்.38/2026 மனுவுடன் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 11 சான்றாவணங்களுள் 1 முதல் 7 சான்றாவணங்கள் ஏற்கனவே நீதிமன்றத்தில் திருவேங்கடம் வட்டாட்சியர் மூலமாக குறியீடு செய்யப்பட்டன என்றும், மற்ற ஆவணங்கள் அனைத்தும் சாட்சிய

அந்தஸ்து இல்லாத ஆவணங்கள் என்றும், மேற்கண்ட ஆவணங்களில் குறிப்பிட்ட சில ஆவணங்கள் ஒளி நகல் ஆவணங்கள் என்றும், வேறு சில ஆவணங்கள் உரிய அதிகாரியிடமிருந்து பெறப்படாத ஆவணங்கள் என்றும், எனவே மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யக்கோரும் ஆவணங்கள் அனைத்தும் சாட்சிய அந்தஸ்து பெறாத ஆவணங்கள் என்றும், வழக்கில் வீண் காலதாமதமும், எதிர்மனுதாரர்களுக்கு வீண் அலைக்கழிவும் உண்டு பண்ணும் நோக்கில் மனுதாரர் இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளார் என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

8.5. மனு, எதிருரை மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கு ஆவணங்ளைப் பரிசீலித்ததில், அசல் வழக்கானது 765/1, 426B/2B2A, 426B/9 ஆகிய சர்வே எண்களில் உள்ள பிராது தபசில் சொத்துக்களைப் பொறுத்து விளம்புகை, சுவாதீனம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரங்கள் கோரி வாதி/மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படும் கூடுதல் சான்றாவணங்களை ஏற்றுக் கொள்ள கோரி தாக்கல் செய்யப்பட்ட வ.வி.எண்.38/2026 மனு 11 ஆவணங்களுள் 3, 4, 6 முதல் 9 மற்றும் 11 ஆகிய ஆவணங்களைப் பொறுத்து மட்டும் அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆவணங்களை மனுதாரர் தரப்பு சான்றாவணங்களாகக்ள குறியீடு செய்வதற்கு மனுதாரர் கோரியது போல வா.சா.1 சாட்சியை மீண்டும் அழைப்பது அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மனுதாரருக்கு அவர் தரப்பு வழக்கை நிரூபிக்க வாய்ப்பளிக்க வேண்டுமென்று இந்நீதிமன்றம் கருதி வ.வி.எண்.38/2026 மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள 3, 4, 6 முதல் 9 மற்றும் 11 ஆகிய

ஆவணங்களை மனுதாரர் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்யும் வகைக்கு வா.சா.1 ஐ மீண்டும் அழைக்க அனுமதி கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவை அனுமதிப்பது நீதியின் பால் உகந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

8.6. எனினும், 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தெரிவித்துள்ளது போல அசல் வழக்கானது மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட தொடர் இடைக்கால மனுக்களால் சுமார் 2 ½ வருடங்கள் வாதி தரப்பு வாதுரைக்காக நிலுவையில் இருந்து வருவதை கருத்தில் கொண்டும், அசல் வழக்கில் 20.03.2023 தேதியிலேயே வாதி தரப்பு சாட்சியம் முடித்து வைக்கப்பட்டு தற்போது அசல் வழக்கானது வாதி தரப்பு வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டு சுமார் 2 ½ ஆண்டு காலமாக வாதி தரப்பு வாதுரை நிலையிலேயே நிலுவையில் இருந்து வருவதை கருத்தில் கொண்டும், இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதார்களுக்கு ஏற்படும் அலைச்சல் மற்றும் கஷ்ட நஷ்டத்தையும், கருத்தில் கொள்ளும்போது, மனுதாரர்/வாதியின் மனுவை எதிர்மனுதாரர்களின் செலவுதொகையுடன் அனுமதித்து உத்தரவிட இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** மனுதாரர்/வாதி, 3 முதல் 6 எதிர்மனுதார்களுக்கு செலவு தொகையாக ரூ.1000/−ஐ வரும் 28.04.2026 ம் தேதிக்குள் செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படுமென்றும், தவறும் பட்சத்தில் இம்மனு தானாக தள்ளுபடி செய்யப்பட்டதாக

கருதப்படுமென்றும் உத்தரவிடப்படுகிறது. மனுவை மீண்டும் அழைக்க 29.04.2026.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

PAVITHRA G
Digitally signed by PAVITHRA G
Date: 2026.04.22 16:18:02 +0300

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

சங்கரன்கோவில்.

**இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** :– – இல்லை –

PAVITHRA G
Digitally signed by PAVITHRA G
Date: 2026.04.22 16:18:06 +0300

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

சங்கரன்கோவில்.

**கூ.மா.உ.நீ, சங்கரன்கோவில்,**

I.A.No.36/2026

in

O.S.No.316/2011

உத்தரவு ( வரைவு/நேரிய)

நாள் : 22.04.2026